கேரளத்துச் சகோதரர்களும், தமிழகத்துச் சகோதரர்களும் அணுகுவார்கள், அணுகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–40

சில கட்சிகள், நாங்கள் இன்னும் வேகமாகச் செயல்படவில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அப்படித்தான் சொல்லவேண்டும். ஏன் இவ்வளவு வேகமாகப் போகிறீர்கள் என்று சில பத்திரிகைகள் எழுதுவதைப்போல, நீங்களும் சொல்வீர்களேயானால் யாரும் எங்களை ஆதரிக்கத் தயாராக இல்லை என்று அர்த்தம். பன்னீர்செல்வம் ஆனாலும் அல்லது செங்கோட்டையன் ஆனாலும், அல்லது நம்முடைய சுதர்சனம் அவர்கள் ஆனாலும் அல்லது பீட்டர் அல்போன்ஸ் ஆனாலும், நம்முடைய மணி அவர்கள் ஆனாலும், இவர்களெல்லாம் நாங்கள் போகின்ற வேகம் சரியல்ல, இன்னும் வேகமாகப் போகவேண்டும், இன்னும் வேகமாகப் பணியாற்றவேண்டும், இன்னும் துணிச்சலாகப் பணியாற்றவேண்டும் என்று சொன்னால்தான் எங்களுக்கு ஊக்கம். ஏன் இவ்வளவு வேகமாகச் செல்கிறீர்கள் என்று நீங்கள் நியாயம் சொல்வீர்களானால், எங்களுக்கு கேரளத்திலே மதிப்பு இருக்காது. எனவே, அந்த மதிப்பை நீங்கள் எங்கள்மீது காட்டுகின்ற எதிர்ப்பின் மூலமாக நீங்கள் தருகிறீர்கள் என்று நான் அந்த எதிர்ப்பை வரவேற்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அப்படித்தான் இருக்கவேண்டும். எதிர்க்கட்சிகள் என்றால் இன்னும் போ, இன்னும் போ, இன்னும் வேகமாகப் போ என்று எங்களை வேகப்படுத்த வேண்டும் என்று இந்த முன்வரிசையில் இருக்கின்ற எல்லாத் தலைவர்களையும், அந்தத் தலைவர்களின் பக்கத்திலே இருக்கின்ற கட்சி நண்பர்களையும் அத்தனை பேரையும், முன்னேயிருந்து இறுதி வரையிலும் உட்கார்ந்திருக்கின்ற அத்தனை பேரையும் கேட்டுக்கொண்டு, இன்று இந்தப் பொருள் பற்றி விவாதிக்கின்ற இந்த ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக, சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த நம்முடைய ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, இந்த அளவில் அமர்கின்றேன், நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் *(அறிமுகம் செய்தல்). 2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் *(இரண்டாம் திருத்தச்)* சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

2006 டிசம்பர் 5]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.